உ

# பன்னிரு திருமுறை

## அறிமுகம்



அகளங்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பன்னிரு திருமுறை அறிமுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# பன்னிரு திருமுறை அறிமுகம்

## அகளங்கன்

வெளியீடு :
"தமிழ் அதர்" வெளியீட்டகம்

2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னிரு திருமுறை அறிமுகம்


| | | |
|---|---|---|
| பெயர் | :- | **பன்னிரு திருமுறை அறிமுகம்** |
| வகை | :- | சமயம் |
| எழுதியவர் | :- | **அகளங்கன் (நா.தர்மராஜா)** |
| முகவரி | :- | 90, திருநாவற்குளம், வவுனியா |
| பதிப்புரிமை | :- | திருமதி பூரணேஸ்வரி தர்மராஜா B.A (Hons) |
| வெளியீடு | :- | "தமிழ் அதர்" வெளியீட்டகம் சார்பில் நா.தர்மராஜா 90, திருநாவற்குளம், வவுனியா |
| இரண்டாம் பதிப்பு | :- | 2021 ஏப்ரல் 04 |
| அச்சுப்பதிப்பு | :- | வாணி கணினிப் பதிப்பகம். இல 85, கந்தசுவாமி கோவில்வீதி, வவுனியா 024- 2223658 |
| விலை | :- | ரூபா 200/= |

---

# PANNIRU THIRUMURAI ARIMUKAM

| | | |
|---|---|---|
| Name | :- | **PANNIRU THIRUMURAI ARIMUKAM** |
| Type | :- | Religion |
| Author | :- | **Agalangan (N.Tharmarajah)** |
| Address | :- | 90, Thirunavatkulam Vavuniya. |
| Copyrights | :- | Mrs. Pooraneswary Tharmarajah B.A(Hons) |
| Published by | :- | "Thamizh Athar" Publishers (N.THarmarajah) 90, Thirunavatkulam, Vavuniya. |
| 2nd Edition | :- | 2021 April 04 |
| Printer | :- | Vaani Computer Printing Center. No 85, Kanthasamy Kovil Road, Vavuniya. 024 2223658 |
| Price | :- | Rs 200/= |
| Email | :- | akalankan04@gmail.com |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வாழ்த்து

இசைத்திட இனிதாகும் எங்கள் பெருமை - தமிழ்
இன்பமோ சொல்லினிலே சொல்லல் அருமை
திசைதோறும் எங்கள்மொழி செய்யும் புதுமை - இது
தேவர்க்கும் கடவுளர்க்கும் என்றும் இனிமை.
(இசைத்.... )

பக்தியின் மொழி தமிழாம்
பரவசந் தரும் புதிராம்
நித்தியம் வளம் பெருகும்
நிகரிலா மொழி தமிழாம்.

கம்பனும் வள்ளு வரும்
கவிஇளங் கோவுந் தந்த
செம்மை மிகு கவிதை
சிந்தை தனை நிறைக்கும். (இசைத்.....)

ஔவையின் அறி வுரைகள்
அருண கிரிப் புகழ்கள்
செவ்வை மிகு தமிழில்
சேக்கிழார் தரும் கவிகள்

மூவர் தமிழ் அமுதும்
முடி மன்னர் ஆதரவும்
தேவர் களும் பருகும்
திருவா சகப் பொலிவும் (இசைத்....)

நல்லூர் நா வலரும்
நல்ல விபு லானந்தரும்
பல்லோர் புகழ்ந் தேத்தும்
பாரதி வள்ள லாரும்

குமர குரு பரரும்
குரு தாயு மானவரும்
உமறுப் புல வரொடு
உயர் வீர மாமுனிவர். (இசைத்....)

அகளங்கன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் பதிப்பின் முன்னுரை

1994ம் ஆண்டு ஜனவரி முதலாம் நாளில் எனது நூல் வெளிவருவது எனக்கு மகிழ்ச்சியளிக்கும் ஒரு நிகழ்ச்சியாகும். அதுவும் சமயநூலாக வெளிவருவது இரட்டிப்பு மகிழ்ச்சி தருவதாகும்.

பன்னிரு திருமுறை பற்றிய ஆராய்ச்சி நூல்கள் அதிகம் வெளிவந்துள்ளன. தனித்தனி திருமுறை பற்றிய ஆராய்ச்சிகளும், தனி நூல் பற்றிய ஆராய்ச்சிகளும் பலர் செய்திருக்கிறார்கள்.

ஆனால் பன்னிரு திருமுறை பற்றிய சிறிய ஒரு கைநூல் காண்பதரிது. வவுனியா சிந்தாமணி விநாயகர் கோவிலில் 1992 ல் பெரியபுராணத் தொடர் சொற்பொழிவை(10 நாட்கள்) ஆற்றிய போதும், பன்னிரு திருமுறைகளைப் பற்றி விபரமாக அறிந்துகொள்வதற்கும், விரைவாகச் சில தகவல்களைப் பெறுவதற்கும் பெரிதும் சிரமப்பட்டேன்.

வவுனியா இந்துமாமன்றத் தலைவர் வள்ளல் இராமசாமி அவர்கள், பன்னிரு திருமுறைகள் பற்றிய ஓர் அறிமுக நூலை எழுதித் தரும்படி கேட்டபோது, திருவருள் கைகூடும் காலம் இதுவே எனத் துணிந்து எழுதத் தொடங்கினேன்.

திரு.க.சி.குலரத்தினம் அவர்கள் எழுதிய "இந்துநாகரிகம்" நூல் எனக்கு பெரிதும் கைகொடுத்தது. பன்னிரு திருமுறை பெருந்திரட்டு, மற்றும் அவ்வப்போது சேகரித்து வைத்திருந்த தகவல்கள் எனக்குப் பெரிதும் உதவின.

இந்தப் "பன்னிரு திருமுறை அறிமுகம்" நூல் மாணவர்களுக்கும், சைவ அன்பர்களுக்கும் பெரிதும் பயன்படும் என்றே நம்புகிறேன்.

இதனை வெளியிடும் இந்து மாமன்றம் - கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா சபை ஆகியவற்றுக்கு என் நன்றிகள்.

வாழ்க சைவம். வளர்க தமிழ்.

**அகளங்கன்**

இந்நூல் திரு.இ.கோகுலதாஸ் அவர்களின் விருப்பத்தில் அவரது தாயார் அமரர் திருமதி சிவபூபதிமலர் இளந்தளைசிங்கம் அவர்களின் சிவபதப்பேறு குறித்த ஓராண்டு நினைவு நூலாக இரண்டாம் பதிப்புக் கண்டது மகிழ்ச்சி தருகிறது.

**04.04.2021** **அகளங்கன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# பன்னிரு திருமுறை
## அறிமுகம்

சைவ நல்லடியார்களும் நாயன்மார்களும் பாடியருளிய திருவருட்பாத் தமிழ் நூல்கள் திருமுறைகளாகத் தொகுக்கப் பட்டுள்ளன. திருமுறைகளைத் தொகுத்து வழங்கியவர் **நம்பியாண்டார் நம்பி** என்னும் ஒரு சிறந்த சிவனடியார். இவர் இராஜராஜ சோழனின் ஆட்சிக் காலத்திலும் அவனது மகனான கங்கை கொண்ட சோழன் எனப் போற்றப்பட்ட இராஜேந்திர சோழனின் ஆட்சிக் காலத்திலும் வாழ்ந்தவர்.

இராஜராஜசோழனின் ஆட்சிக்காலத்தில் அம்மன்னனின் வேண்டுகோளுக்கிணங்க முதல் 7 திருமுறைகளைத் தொகுத்தார் என்றும், பின்பு இராஜேந்திரசோழனின் ஆட்சிக் காலத்தில் அவனது வேண்டுகோளுக்கிணங்க 8ம், 9ம், 10ம், 11ம் திருமுறைகளைத் தொகுத்தார் என்றும் அறியக் கூடியதாக இருக்கின்றது.

திருவிசைப்பாவில் கங்கை கொண்ட சோழேச்சரம் பாடப்பட்டிருப்பதனால் இராஜேந்திர சோழனின் வடநாட்டு வெற்றிக்குப் பின்பே அவை பாடப்பட்டிருத்தல் கூடும். அத்தோடு பதினோராம் திருமுறையில் நம்பியாண்டார் நம்பிகளின் பாடல்கள் காணப்படுவதையும் கருதலாம்.

இவரின் பின் வாழ்ந்த சேக்கிழார் சுவாமிகள் பாடியருளிய **"பெரியபுராணம்"** என போற்றப்படும் **"திருத்தொண்டர் புராணம்"** பன்னிரண்டாம் திருமுறையாக பின்னாளில் சேர்த்துக் கொள்ளப் பட்டுள்ளது.

திருமுறைப் பாடல் ஒன்றைத் தனியாகப் பாடும்போதும் அல்லது பலவற்றைப் பாடும் போதும் "திருச்சிற்றம்பலம்" என்று தொடக்கத்திலும் முடிவிலும் கூறுதல் வழக்கமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுவாகவே **"நின்றாலும், இருந்தாலும், கிடந்தாலும், நடந்தாலும், மென்றாலும், துயின்றாலும், விழித்தாலும், இமைத்தாலும்"** திருச்சிற்றம்பலம், திருச்சிற்றம்பலம் என ஒவ்வொரு காரியத்தின் முன்னும் கூறிக்கொள்ளுதல் சிவனடியார்களின் பெருவழக்காகும்.

திருச்சிற்றம்பலம் என்பது **"தத்துவம் கடந்த தடையிலா அருளறிவுப் பெருவெளி** என்பதாகும்" என்பர் சைவ நல்லறிஞர்.

**"திருச்சிற்றம்பலம்"** என்னும் பதத்தில் வரும் எழுத்துக்கள் ஒற்று நீக்கி அதாவது மெய்யெழுத்துகளைத் தவிர்த்து ஆறு ஆகும்.

**(கிரந்தக் கணக்கு ஒற்று நீக்கியே கணக்கிடப்படுகின்றது.)**

இப்படி முதலிலும் முடிவிலுமாக இரு தடவைகள் சொல்லும் போது மொத்தம் பன்னிரண்டு எழுத்துக்கள் வருகின்றன. இதுவே திருமுறைகள் பன்னிரண்டாக அமைந்த திருவருள் என்பர் சிலர்.

தமிழில் உயிரெழுத்துக்கள் பன்னிரண்டு. சைவத் தமிழ் நூலாகிய திருமுறைகளும், சைவ உலகிற்கு உயிராக இருக்கும்படி பன்னிரண்டாக அமைந்தன என்றும் கூறுவர்.

முதலாவது திருமுறையில் முதற் தேவாரமாகிய "தோடுடைய செவியன்..." இல் (த் + ஓ = தோ) ஓங்கார உயிர் முதற் சொல்லின் முதலெழுத்தில் அமைந்துள்ளது. பன்னிரண்டாந் திருமுறையாகிய பெரியபுராணத்தின் இறுதிப் பாடலாகிய "என்றுமின்பம் பெருகும் இயல்பினால்...." என்ற பாடலின் இறுதிச் சொல் (உலகெலாம்) லின் இறுதி எழுத்து **"ம்"** இல் முடிகிறது.

**ஓம்** என்ற பிரணவ மந்திரத்தினுள் அடங்கும் அருட்செயலாகவே பன்னிரண்டாந் திருமுறை வரை சென்று முற்றுப்பெற்றது என்றும் சைவ அறிஞர்கள் கூறுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதம் – ஆகமம்

திருமுறைகள் வேதாகமக் கருத்துக்களைத் தம்மகத்தே கொண்டவையாகக் காணப்படுகின்றன. வேதங்களையும், ஆகமங்களையும், சிவபெருமான் உமாதேவியாருக்கு உபதேசித் தருளினார் என்பது நீண்டகால நம்பிக்கையாகும்.

அதனால் வேதங்களினதும், ஆகமங்களினதும் சாரமாக அமைந்த திருமுறைகளை, சித்தத்தை சிவன்பால் வைத்த சிவனடியார்கள் பாடியருளியமையால் திருமுறைகளும் சிவபெருமானால் அருளிச் செய்யப்பட்டவையாகக் கருதப்படுதல் தகும் எனலாம்.

அதுமட்டுமன்றிச் சிவபெருமான் நேரடியாகப் பாடிய பாசுரம் ஒன்றும் பதினோராம் திருமுறையில் இடம் பெற்றிருக்கின்றது.

சித்தத்தைச் சிவன்பால் வைத்த சிவனடியார்கள், தாமென்ற நிலையை இழந்தவர்கள். **"நன்றே செய்வாய். பிழை செய்வாய். நானோ இதற்கு நாயகமே"** என்று வாழ்ந்த அடியார்களின் வாக்குகள் ஆண்டவனின் வாக்குகளே ஆகும்.

இது மட்டுமன்றி சில அடியார்களுக்கு சிவபெருமான் பாட அடியெடுத்துக் கொடுத்தும் மாணிக்கவாசக சுவாமிகள் பாடியதைப் படி (பிரதி) எடுத்துக் கொண்டு போயும் அருட் செயல்களைச் செய்ததால் திருமுறைகள் தமிழ் வேதங்களாக தமிழ் ஆகமங்களாகப் போற்றப்படும் தகுதி படைத்தனவாக மிளிர்கின்றன.

இவற்றின் காரணமாக பன்னிரண்டு திருமுறைகளும் **"திருமுறைகள்"** என்றும் **"திருமறைகள்"** என்றும் அழைக்கப்படக் கூடியன என்பர் அறிஞர் (முறை - ஆகமம், மறை - வேதம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமுறைகளின் பயன்

படித்தவர்களைப் பரவசத்தில் ஆழ்த்தும் தன்மை படைத்தவையாகவும், உலகியல் ஆத்மீக அறிவுகளைத் தரும் உன்னதமானவையாகவும், பாபங்களைப் போக்கும் பெருமை படைத்தவையாகவும், பத முத்தியைத் தரும் அருமை படைத்தவையாகவும் திருமுறைப் பாடல்கள் விளங்குகின்றன.

சிவசின்னங்களின் மகிமையையும், அடியார்களின் பெருமையையும், ஆண்டவனின் அளப்பெருங் கருணையையும் அந்த அருட் கருணையை அடைவதற்குக் கடைப்பிடிக்க வேண்டிய சைவ நெறிகளையும், திருமுறைப் பாடல்கள் விளக்குகின்றன.

வானத்தில் முட்டும் படியாக குவித்து வைக்கப்பட்ட பெரிய விறகுக் குவியலையும் ஒரு சிறு நெருப்பு எரித்து அழித்து விடுவது போல, செய்த பாவக் குவியலை **"சிவாய நம"** என்னும் பஞ்சாட்சர மந்திரம் போக்கிவிடும் என்று பஞ்சாட்சரத்தின் பெருமையை அடியார்கள் போற்றியுள்ளனர்.

பக்திநெறி பழைய பாவங்களையும் நீக்கி விடும் என்ற கருத்தில் **"பத்திநெறி அறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்...."** என அருளாளர்கள் அகமகிழ்ந்து பாடியுள்ளார்கள். நற்றமிழ்ப் பாடல்களிலே நன்னெறியைப் போதித்தவை திருமுறைகளாகும்.

சைவநெறி முத்திப் பேற்றுக்குரிய நெறி மட்டுமன்றி, முத்திப்பேற்றை அடைவதற்கு இடையிலே இருக்கின்ற சகல போகங்களையும், சகல யோகங்களையும் அடைவதற்கும் உரிய நன்னெறி என்பதைத் திருமுறைப் பாடல்கள் எடுத்தியம்புகின்றன.

**"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்"** என்றும் **"இம்மையே தரும் சோறும் கூறையும்"** என்றும், **"பொன்னும் மெய்ப்பொருளும் தருவானை"** என்றும், பல வகையாகச் சிவபெருமானை சிவனடியார்கள் போற்றித் துதித்திருப்பது இந்த உண்மையை உலகுக்கு உணர்த்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவர்களின் முதற்கடவுளான சிவபெருமானை வழிபடும் அடியார்கள் கோயில்களிலே பஞ்சபுராணம் ஓதித் துதிக்கும் வழக்கம் இன்றும் உண்டு. தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் (பெரியபுராணம்) என்பவையே அவை. இவையெல்லாம் திருமுறைகளின் உள்ளேயே அடங்கு கின்றன.

தனது அடியவனாகிய சுந்தரமூர்த்தி நாயனாரின் மகிழ்ச்சிக்காக, ஊடல் கொண்ட பரவையாரின் ஊடல் தீர்க்க இரவிலே நடந்து தூது சென்று ஊடல் தீர்த்தும், வேண்டிய பொழுதெல்லாம் பொன்னைக் கொடுத்தும், நெல்லைக் கொடுத்தும், வழிப்பசி போக்க உணவு கொடுத்தும், தாகந்தீர்க்க தண்ணீர் கொடுத்தும், அடியாரைப் பேணியவர் சிவபெருமான் எனச் சிவபெருமானின் எளிவந்த கருணைச் செயற்பாடுகளையெல்லாம் திருமுறைகளில் கண்டு களிகூரலாம்.

அதனால் திருமுறைகளை ஓதுவதனாலேயே வையத்துள் வாழ்வாங்கு வாழ வசதிகளும், பொன்னும் புகழும் கிட்டும், தேக நீக்கத்தின் பின் முத்தியும் கிட்டும்.

இம்மைப் பயனையும், மறுமைப் பயனையும் ஒருங்கே தரவல்ல திருமுறைகளைச் சைவர்கள் போற்றா தொழிந்துபோனால் வேறெந்த இலகுவான வழியாலும் இருமைப் பயன்களைப் பெறவே முடியாது என்று கூறலாம்.

இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது நாம் கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாகும் என்பது திருமுறை ஆசிரியர்களின் கருத்தாகும். வேத, ஆகம சாரங்களாகவும், சைவ சித்தாந்தக் கருத்துச் சுரங்கங்களாகவும் உள்ள திருமுறைகளில் சாத்திர பாடல்களும் உண்டு. தோத்திரப் பாடல்களும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பன்னிரு திருமுறைகள்

முதலாம், இரண்டாம், மூன்றாம், திருமுறைகள் **திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார்** பாடிய தேவாரங்களைக் கொண்டுள்ளன. நாலாம், ஐந்தாம், ஆறாம், திருமுறைகள் **திருநாவுக்கரசு நாயனார்** பாடிய தேவாரங்களைக் கொண்டுள்ளன. ஏழாம் திருமுறை **சுந்தரமூர்த்தி நாயனார்** பாடிய தேவாரங்களைக் கொண்டுள்ளது.

முதல் ஏழு திருமுறைகள் தேவாரங்கள் அடங்கிய திருமுறைகள் ஆகும். தேவாரம் என்பது கடவுளுக்கு மாலை போன்றது எனக் கருதப்படும் ஒரு சொல். (தேவு - கடவுள், ஆரம் - மாலை)

முதல் 7 திருமுறைகளையும் சேர்த்து **அடங்கன் முறை** என்று கூறும் வழக்கம் உண்டு. தேவாரங்களைப் பாடிய மூவரையும் **"தேவார முதலிகள்"** என்று அழைக்கும் வழக்கம் நெடுங்காலமாக உண்டு.

இந்த ஏழு திருமுறைகளையும் இராஜராஜசோழனின் வேண்டுகோளுக்கிணங்க நம்பியாண்டார் நம்பிகள் அவனது காலத்தில் தொகுத்தார் என்பர் வரலாற்றறிஞர்.

எட்டாம் திருமுறையில் மாணிக்கவாசக சுவாமிகள் பாடிய **திருவாசகம், திருக்கோவையார்** என்னும் இரு நூல்கள் இடம்பெறுகின்றன.

தேவார முதலிகள் ஆகிய மூவரோடு, மாணிக்கவாசகப் பெருமானையும் சேர்த்து இந்த நால்வரையும் **சமயகுரவர்** என அழைத்தல் தமிழ்ச் சைவர் மரபாகும்.

இந்த நால்வரையும் சிவபெருமான் ஆட்கொண்ட விதத்தைக் கூறும்போது அருள்மொழி அரசு திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் அற்புதமாக விளக்குவார். சம்பந்தரை **"பாலைக்"** கொடுத்து ஆட்கொண்டார். அப்பரை **"சூலை"** கொடுத்து ஆட்கொண்டார். சுந்தரரை **"ஓலை"** கொடுத்து ஆட்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசகரை **"காலைக்"** கொடுத்து ஆட்கொண்டார். (திருவடி தீட்சை கொடுத்தது) என்பார்.

ஒன்பதாம் திருமுறையில் **திருவிசைப்பா, திருப்பல்லாண்டு** என்பவை இடம்பெற்றிருக்கின்றன. இவற்றைப் பாடியோர் ஒன்பது பேர். பத்தாம் **திருமுறையில்** திருமூலர் பாடிய **திருமந்திரம்** என்ற தனிநூல் இடம்பெற்றிருக்கின்றது.

பதினோராம் திருமுறையில் **திருவாலவாயுடையார்** முதலிய பன்னிருவர் பாடிய 40 பிரபந்தங்கள் அடங்கியுள்ளன. பன்னிரண்டாம் திருமுறையில் **சேக்கிழார் சுவாமிகள்** பாடியருளிய **பெரிய புராணம்** என அழைக்கப்படும் **திருத்தொண்டர் புராணம்** இடம்பெற்றிருக்கின்றது.

கோவை, அந்தாதி, கலம்பகம், இரட்டை மணிமாலை, மும்மணிக் கோவை. உலா, ஆற்றுப்படை, நான்மணிமாலை முதலான பிரபந்தங்களும், புராணமும் அடங்கிய 12 திருமுறைகள் தமிழ் இலக்கிய உலகுக்கு பெரும் சொத்தாக இருக்கின்றன.

இவற்றிலே **கலம்பகம்** என்ற பிரபந்த வகையைத் தவிர ஏனையவற்றை தமிழ் இலக்கிய உலகுக்குப் பன்னிரு திருமுறைகளே வழங்கியிருக்கின்றன.

இத்திருமுறையில் இடம் பெறும் ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகத்திற்கு முன்பே நந்திக்கலம்பகமும், சமணரின் திருக்கலம்பகமும் எழுந்துவிட்டன என்பர் இலக்கிய வரலாற்றாசிரியர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாந் திருமுறை

சிவபெருமானின் திருவருளால் ஞானப்பால் குடித்து ஆளுடைய பிள்ளையாராகிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பாடிய பாடல்கள் அளவிலாப் பெருமை படைத்தவை. **"வேதநெறி தழைத்தோங்க, மிகு சைவத் துறை விளங்க, பூத பரம்பரை பொலியப், புனிதவாய் மலர்ந்தழுத, சீதவள வயற்புகலித் திருஞானசம்பந்தர்"** திருவாய் மலர்ந்தருளிய திருப்பதிகங்களின் எண்ணிக்கை மொத்தம் 16000 என்பர்.

**சோழ நாட்டுச் சீர்காழியில்** அந்தணர் குலத்தில் கவுணியர் கோத்திரத்தில் **சிவபாதவிருதயருக்கும், பகவதி** அம்மையாருக்கும் மகனாக அவதரித்த திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் 16 ஆண்டுகளே இப்பாரில் வாழ்ந்து பாடிய பதிகங்களின் எண்ணிக்கை 16,000 என்பதை **"பன்னுதமிழ்ப் பதினாறாயிரம் நற்பனுவல் மன்னுபுவியார்க்கு வாய்ப்பவும்"** என்னும் வரிகள் காட்டுகின்றன.

இருப்பினும் காலத்தால் அழிந்து போனவைபோக ஞாலத்தில் மிஞ்சியிருப்பவை மொத்தம் 384 திருப்பதிகங்களேயாகும். ஒவ்வொரு பதிகத்திலும் பெரும்பாலும் 11 திருப்பாடல்கள் காணப்படுகின்றன. சிலவற்றில் 12 திருப்பாடல்களும் வந்துள்ளன. சில திருப்பதிகங்களில் சிதைவடைந்தும், அழிந்தும், குறைந்து 10, 9, 7 திருப்பாடல்கள் வெளிவந்துள்ளன. மொத்தம் 4126 திருப்பாடல்கள் மட்டுமே இதுவரை கிடைக்கப்பெற்றுள்ளன.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின் பாடல்களை **"திருக்கடைக் காப்பு"** என்றும் **"திருநெறிய தமிழ்"** என்றும் அழைப்பர். இவர் தமது முதற் பதிகத்திலேயே **"ஞானசம்பந்தன் உரைசெய்த திருநெறிய தமிழ்"** என்று தனது திருப்பாடல்களுக்கு பெயர் சூட்டியுள்ளார். தெய்வத்தன்மை பொருந்திய சிவநெறிக்குரிய தமிழ்மறை என்பது இதன் பொருளென்பர் அறிஞர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் திருமுறையில் 136 திருப்பதிகங்களில் 1469 திருப்பாடல்கள் காணப்படுகின்றன. இவை 8 பண்களில் அமைந்துள்ளன. இத் திருப்பதிகங்கள் தமிழ்நாட்டில் உள்ள 90 திருத்தலங்களில் பாடப்பட்டுள்ளன.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின் திருப்பதிகங்களில் இயற்கை அழகு மேலோங்கி இருப்பதை இலகுவில் இனங்கண்டு கொள்ளலாம்.

மக்கள் வாழ்க்கைமுறை, புராணக்கதைகள், இதிகாச நிகழ்ச்சிகள், வரலாற்றுக் குறிப்புகள், சைவசித்தாந்தக் கருத்துக்கள், வேதநுண்பொருட்கள் முதலியன இவரது திருப்பதிகங்களில் விரவி வந்துள்ளன.

அகத்திணை மரபுக்கேற்ப நாயக , நாயகி பாவனையில் பாடும் பாடல்களும் இவரது திருமுறைப் பாடல்களில் காணப்படுகின்றன.

## இரண்டாந் திருமுறை

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பாடியருளிய இரண்டாந் திருமுறையில் 122 திருப்பதிகங்களில் 1310 திருப்பாடல்கள் காணப்படுகின்றன. இவை 88 திருத்தலங்களில் அருளிச் செய்யப்பட்டுள்ளன. இவை ஆறு பண்களில் அமைந்துள்ளன.

ஈழத்திலுள்ள மாதோட்டத்தில் பாலாவிக் கரையில் கௌரி அம்பாளுடன் இருந்து அருள்பாலிக்கும் **திருக்கேதீஸ்வர நாதரைப்** போற்றிப் பாடிய பதிகம் இத்திருமுறையில் அடங்குகிறது

## மூன்றாந் திருமுறை

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பாடியருளிய மூன்றாம் திருமுறையில் 125 திருப்பதிகங்களில் 1347 திருப்பாடல்கள் காணப்படுகின்றன. பிற்காலத்தில் **திருவிடைவாய்** என்னுந் திருக்கோயிலிற் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டிலிருந்து ஒரு பதிகமும் இத்தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. எனவே மொத்தம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

126 திருப்பதிகங்களும், 1358 திருப்பாடல்களும் காணப்படுகின்றன. இவை 85 திருக்கோவில்களிற் பாடப்பட்டன.

ஈழத்திலுள்ள திருகோணமலையில் மாதுமையாளுடன் எழுந்தருளியிருக்கும் **திருக்கோணேச்சரப்** பெருமானைத் திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் பாடித் துதித்த **"நிரைகழலரவம் சிலம்பொலி அலம்பும்..."** எனத் தொடங்கும் திருப்பதிகமும் இத்தொகுப்பில் அடங்குகிறது.

எல்லோரும் வாழ்தல் வேண்டும். எல்லோரும் ஆன்ம ஈடேற்றம் பெறுதல் வேண்டும். எல்லோரும் இறைவனை வணங்குதல், வாழ்த்துதல், பாடுதல், ஆடுதல், பரவுதல், வலம் வருதல், பணிபுரிதல் முதலானவற்றைச் செய்தல் வேண்டும் என்றும், அச் செய்கைகளால் இறையருள் கட்டாயம் கிடைக்கும் என்றும் சம்பந்தப் பெருமான் கருத்துரை பகர்ந்துள்ளார்.

தாம் பாடிய பாடல்களைப் பக்தியோடு பாடுபவர்கள் வீடுபேறு அடைதல் திண்ணம் என்று இவர் ஆணையிட்டுக் கூறுவார். **"அந்த உலகெய்தி அரசாளும். அதுவே சரதம் ஆணை நமதே"** என்றும்,

தாம் பாடியவை அனைத்தும் இறையருள் வாக்குக்களே என்றும் கூறியுள்ளார். **"எனதுரை தனதுரையாக", "பழுதிலிறை எழுது மொழி தமிழ்விரகன் வழிமொழிகள் மொழிதகையவே"** என்றும் இவர் பாடும் வரிகள் இதனை ஆதாரப்படுத்துகின்றன.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின் தேவாரத் திருப் பாடல்களில் பொதுவாக, பெரும்பாலும் 8ம் பாடலில் சிவபெருமான் இராவணனை மலையின் கீழ் நெரித்த செய்தியும், ஒன்பதாம் பாடலில் பிரம்மா, விஷ்ணு முதலியோருக்கு காணரிய பொருளாகச் சிவபெருமான் நின்ற செய்தியும், 10ம் பாடலில் புத்தர், சமணர் ஆகிய புறச்சமயத்தோரின் பொய்மை நெறிகளும், 11ம் பாடலில் தனது திருப்பதிகம் ஓதுவோர் பெறும் பயனும், அவரைப் பற்றிய விபரங்களும் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நான்காந் திருமுறை

**திருமுனைப்பாடி** நாட்டில் **திருவாமூரில்** சைவவேளாளர் குலத்தில் **புகழனாருக்கும், மாதினியாருக்கும்** புத்திரராக, **திலகவதியாருக்குத்** தம்பியாராக அவதரித்து **மருணீக்கியார்** எனப் பெயர் சூட்டப் பெற்றுச் சமண சமயத்தைச் சார்ந்து **தருமசேனர்** எனும் பெயர் மாற்றம் பெற்று வாழ்ந்த **திருநாவுக்கரசு நாயனாரைச்** சிவபெருமான் சூலைநோய் கொடுத்து ஆட்கொண்டார்.

81 வருடங்கள் இப்பூமியில் வாழ்ந்த திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய தேவாரப் பதிகங்களின் எண்ணிக்கை 4900 என்பதை **"இணைகொள் ஏழெழு நூறிரும் பனுவல் ஈன்றவன் நாவினுக் கரையன்"** என்ற சுந்தரமூர்த்தி நாயனாரின் பாடல் வரிகளும் **"பதிகம் ஏழெழு நூறுபகரும் மாகவியோகி பரவு நாவரசான பரம காரண ஈசன்"** என்ற நம்பியாண்டார் நம்பிகளின் வரிகளும் **"திருநாவுக்கரசனெனும் செம்மையாளன் ஒருநாற்பத் தொன்பதினாயிரமாகப் பெருநாமம் புகலூரில் பதிகம் கூறிப் பிஞ்ஞகனார் அடியிணைகள் பெற்றுள்ளாரே"** என்ற உமாபதி சிவாச்சாரியாரது வரிகளும் மெய்ப்பிக்கின்றன. இவரது பாடல்களே **தேவாரம்** என்ற பெயர் பெற்றன.

பதிகம் ஒன்றுக்குப் பத்துத் திருப்பாடல்கள் வீதம் 49 ஆயிரம் பாடல்களை அப்பர் சுவாமிகள் அருளிச் செய்தார் என்பர் அறிஞர்.

அப்பர் சுவாமிகளின் திருப்பதிகங்களில் 312 திருப்பதிகங்களே இப்போது கிடைத்துள்ளன. மொத்தம் 3066 திருப்பாடல்களே காணப்படுகின்றன. இவரது பதிகமொன்றில் 10 திருப்பாடல்களே பொதுவாகக் காணப்பட்டாலும், **திருவங்கமாலை** என்னும் திருப் பதிகத்தில் 12 திருப்பாடல்களும், **திருவையாற்றுத்** திருப்பதிகத்தில் 20 திருப்பாடல்களும் காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது 10ம் பாடலில் இராவணனுக்குச் சிவபெருமான் அருள்புரிந்ததைப் பாடும் வழக்கத்தை இவர் கொண்டுள்ளதை அநேக திருப்பதிகங்களிற் காணலாம். திருநாவுக்கரசு சுவாமிகளின் திருப்பாடல்கள் **இலக்கிய நயம்** மிகுந்து காணப்படுகின்றன.

நான்காம் திருமுறையில் 113 திருப்பதிகங்களில் 1070 திருப்பாடல்கள் காணப்படுகின்றன. இவை 51 திருத்தலங்களில் அருளிச் செய்யப்பட்டன. 10 பண்களில் இவை அமைந்துள்ளன.

## ஐந்தாந் திருமுறை

இத்திருமுறையில் அப்பர் சுவாமிகளின் 100 திருப்பதிகங்களில் 1015 திருப்பாடல்கள் காணப்படுகின்றன. இவை 75 திருத்தலங்களிற் பாடப் பட்டவையாகும்.

ஒரு தலத்திலிருந்து இன்னும் ஒரு தலத்திற்குச் செல்லும் வழியிலும், உழவாரத் திருப்பணி செய்யும்போதும், இறைவனின் புகழை மக்களுக்கு உணர்த்தும் போதும், திருப்பணிகளின் போதும் பாடியருளிய பதிகங்கள் இத்திருமுறைகளில் அடங்குகின்றன. இவைகள் யாவும் **"திருக்குறுந்தொகை"** என்னும் பெயரை உடையன.

## ஆறாந் திருமுறை

திருநாவுக்கரசு சுவாமிகள் பாடியருளிய 99 திருப்பதிகங்களில் 981 திருப்பாடல்கள் ஆறாம் திருமுறையில் காணப்படுகின்றன. இவை யாவும் **"திருத்தாண்டகம்"** என்னும் செய்யுள் வகையைச் சேர்ந்தவையாகும். தாண்டகச் செய்யுளைச் சிறப்பாகப் பாடியதன் காரணமாகத் **"தாண்டக வேந்தர்", "தாண்டகச் சதுரர்"** என்னும் திருநாமங்கள் இவருக்கு வழங்கப்படுகின்றன.

அப்பர் சுவாமிகளின் 4ம் திருமுறை கவிச்சுவை நிரம்பியதாகவும், 5ம் திருமுறை அறிவுரை நிரம்பியதாகவும், 6ம் திருமுறை இறைவனின் கருணையையும், அவர் ஆன்மாக்கள்மேல் வைத்துள்ள அளப்பரும் கருணையால் திருவருள் பாலிக்கும் பான்மையைப் பாடுவதாகவும் அமைந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏழாந் திருமுறை

**திருமுனைப்பாடி** நாட்டில் **திருநாவலூரில்** ஆதிசைவ வேதியர் குலத்தில் **சடையனாருக்கும், இசைஞானியாருக்கும்** மகனாக அவதரித்த **சுந்தரரைச்** சிவபெருமான் அவரது திருமணச் சடங்கின் போது வலிய வந்து அடிமை ஓலை காட்டி ஆட்கொண்டார்.

18 ஆண்டுகளே இப்பாரில் வாழ்ந்த சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய திருப்பதிகங்கள் 38000 என்பர். இவை 114 திருத்தலங்களிற் பாடப்பட்டவையாகும். ஆனால். இன்று எமக்குக் கிடைத்துள்ளவை 96 திருத்தலங்களிற் பாடப்பட்டவையும் 4 பொதுத் திருப்பதிகங்களுமாக மொத்தம் 100 திருப்பதிகங்கள் மட்டுமே ஆகும். மொத்தம் 1026 திருப்பாடல்களே 7ம் திருமுறையில் காணப்படுகின்றன. இவை 18 பண்களில் அமைந்துள்ளன.

சிவபெருமானைப் **"பித்தன்"** என்று ஏசியவர் இவர், சிவபெருமான் அந்த வார்த்தையில் மகிழ்ந்து **"பித்தா"** என்றே பாடும்படி அடியெடுத்துக் கொடுத்தார். சிவபெருமானோடு தோழனாக வாழ்ந்த அவர் **தம்பிரான் தோழர்** என்று போற்றப்பட்டார்.

சுந்தரரைப் போல, தமக்கு முன் வாழ்ந்த சிவனடியார்களின் திருநாமங்களைத் தொகுத்துப் பாடியவர்கள் வேறு யாருமில்லை. இவரது **திருத்தொண்டத் தொகையில்** மட்டுமன்றி தேவாரத் திருப் பதிகங்களிலும் இவருக்கு முன் வாழ்ந்த சிவனடியார்கள் பெரிதும் போற்றப்பட்டிருக்கின்றார்கள்.

ஈழத்தின் மேற்குத் திசையில் மன்னாரில் **"மாவின்கனி தூங்கும் பொழில் மாதோட்ட நன்னகரில், பாவம்வினை அறுப்பார் பயில் பாலாவியின் கரையில்"** கௌரியம்மையோடு வீற்றிருந்து அருள்பாலிக்கும் திருக்கேதீஸ்வரநாதரையும் சுந்தரர் ஒரு திருப் பதிகத்தில் போற்றித் துதித்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரமூர்த்தி நாயனாரின் தேவாரத்தில் **பொருள்நயம்** செறிந்திருப்பதையும், சிவபெருமானோடு தோழமையாக உரையாடும் பான்மையையும் கண்டுகொள்ளலாம்.

இந்த ஏழு திருமுறைகளிலும் அடங்கும் தேவாரங்கள் முழுவதும் தனித்தமிழ்த் **"திருமாமறைகள்"** என்று சைவ நல்லறிஞர் போற்றுவர்.

தேவாரப் பாடல்கள் சொல்நயம், பொருள் நயம் முதலியவற்றோடு படிப்போரையும், கேட்போரையும் கவர்ந்திழுக்கும் பண்நயமும், இசை நயமும் மிகுந்தவை. ஆன்ம ஈடேற்றத்துக்கு அடிகோலுபவை என்பர் அறிஞர்.

## எட்டாந் திருமுறை

**பாண்டிய நாட்டில் திருவாதவூரில்,** அமாத்தியப் பிராமண குலத்திலே **சம்புபாதாசிரியருக்கும், சிவஞானவதி** அம்மையாருக்கும் மகனாக அவதரித்த **மாணிக்கவாசக சுவாமிகள்** பாடியருளிய **திருவாசகம், திருக்கோவையார்** ஆகிய இரு நூல்களும் எட்டாந் திருமுறையில் இடம்பெற்றுள்ளன.

திருவாசகம் மிகவும் போற்றப்படும் பக்திப் பாடல்களைக் கொண்ட அதி அற்புதமான பாடற் தொகுப்பாகும். இப்பொழுது 51 பகுதிகளடங்கிய 656 திருப்பாடல்களே கிடைக்கப்பெற்றுள்ளன. இவற்றில் **திருச்சாழல், திருப்பொன்னூசல், பண்டாய நான்மறை, திருப்படையாட்சி** முதலிய பகுதிகளிற் பாடல்கள் குறைந்து காணப்படுகின்றன. **"இன்பவெள்ளம்"** போன்ற பகுதிகள் மறைந்து விட்டன என ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

**"திருவாசகத்திற்கு உருகாதவர் நெஞ்சம் ஒரு வாசகத்திற்கும் உருகாது"** என்று கூறும் கூற்று திருவாசகம் கல்லையும் கனிய வைக்கும் தன்மை படைத்தது என்பதற்குச் சான்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணிக்கவாசக சுவாமிகள், தான் என்ற நிலையை இழந்து, அழுதழுது உருகி உருகிப் பாடிய தித்திக்கும் தெவிட்டாத தேன் விருந்தான திருவாசகத்தின் பெருமை அளப்பரியது.

எட்டாந் திருமுறையில் அடங்கிய இன்னொரு நூலான **திருக்கோவையார்** தமிழில் தோன்றிய முதல்க்கோவை நூலாகும். தலைவன், தலைவி பாவனையில் அகத்திணை மரபுக்கேற்பப் பேரின்பக் காதலைப் பற்றி மாணிக்கவாசக சுவாமிகள் பாடிய திருக்கோவையாரில் 400 திருப்பாடல்கள் காணப்படுகின்றன. சிறந்த இலக்கிய நூலாகவும் மிளிரும் திருக்கோவையாரை ஆகமநூல் வழியில் செய்யப்பட்ட **ஞானயோக நுண்பொருளுடைய நூல்** என்று சைவ அறிஞர்கள் போற்றுகின்றனர்.

இருபத்தைந்து அதிகாரங்களைக் கொண்ட இத்திருக் கோவையாரைச் சிவபெருமான் மாணிக்கவாசக சுவாமிகளிடம் **"பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக"** எனக் கேட்டுப் பாடச் செய்து தாமே எழுதி எடுத்துச் சென்றார் என்பது வரலாறு.

பாண்டிய மன்னனான **அரிமர்த்தன** பாண்டியனின் முதலமைச்சராக இருந்த மாணிக்கவாசக சுவாமிகள், குதிரை வாங்கச் சென்ற போது திருப்பெருந்துறையிலே சிவபெருமானே குருவாக வலிய வந்து திருவடி தீட்சை கொடுத்து ஆட்கொண்டார் என்றும், பின்னாளில் மாணிக்கவாசகரிடம் சிவபெருமான் அந்தண வடிவில் வந்து **திருவாசகம், திருக்கோவையார்** ஆகியவற்றைத் தாமே கேட்டு தம் கைப்பட எழுதி **"வாதவூரன் விளம்பிட அம்பலவன் எழுதியது"** என்று எழுதி **"அழகிய சிற்றம்பலமுடையான்"** என ஒப்பமிட்டு தில்லைச் சிற்றம்பலத்துப் பஞ்சாட்சரப் படியில் வைத்தார் என்றும், எட்டாந்திருமுறையின் பெருமைகளை நூல்கள் போற்றுகின்றன.

திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோர் நின்ற மார்க்கங்களை முறையே **தாச மார்க்கம், சற்புத்திர**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மார்க்கம், சக மார்க்கம், சன்மார்க்கம்** என்றும், இவர்கள் நின்ற நெறிகளை முறையே **சரியை, கிரியை, யோகம், ஞானம்** என்றும், இவர்கள் அடைந்த முக்திகளை முறையே **சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சியம்** என்றும் குறிப்பிடுவர்.

இப்பூமியில் 32 ஆண்டுகளே வாழ்ந்த மாணிக்கவாசக சுவாமிகள், அவர் பிறந்த ஊரின் பெயரால், **திருவாதவூரடிகள்** என்றே அழைக்கப்பட்டார். பெரிய புராணத்தில் இவரது வரலாறு காணப்படாமையால் இவரை **நாயனார்** என்று கூறும் வழக்கம் இல்லை. சுந்தரர் திருத்தொண்டத்தொகையில் இவரைப் பற்றிப் பாடாததால், பெரியபுராணத்தில் இவர் பெயர் இடம்பெறவில்லை என்பர் ஆராய்ச்சியாளர்.

## ஒன்பதாந் திருமுறை

ஒன்பதாந் திருமுறையில் இடம்பெற்றுள்ளவை **திருவிசைப்பா, திருப்பல்லாண்டு** என்னும் திருப்பதிகங்களாகும். **ஏழிசையாய், இசைப்பயனாய்** இருக்கும் இறைவனை இத் திருமுறையாசிரியர்கள் சிறந்த இசையில் பாடிப் பரவினர். இசைத்தமிழின் வளர்ச்சியை திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்பவற்றிலே கண்டு கொள்ளலாம். திருவிசைப்பாத் திருப் பாடல்களைப் பாடியவர்கள் ஒன்பதின்மர். (9) மொத்தத் திருப் பதிகங்களின் எண்ணிக்கை 28, மொத்தத் திருப் பாடல்களின் தொகை 288 ஆகும்.

இசைநயமுள்ள சிறந்த பாடல்களை இத்தொகுப்புக் கொண்டுள்ளதால் இத் தொகுப்பு திரு **இசைப்பா** எனப் பெயர் பெற்றது. **"சாளர பாணி"** என்ற பண் அமைந்த பாடல்களும் இத்திருவிசைப்பாவில் இடம்பெற்றுள்ளன. இப்பண் இதற்கு முந்திய திருமுறைகளில் இடம்பெறவில்லை. திருவிசைப்பாவில் இடம்பெற்ற மொத்தப் பண்களின் எண்ணிக்கை 6 ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தொகுப்பில் **திருமாளிகைத் தேவர்** பாடிய 4 திருப் பதிகங்களில் 45 திருப் பாடல்களும், **சேந்தனார்** பாடிய 3 திருப் பதிகங்களில் 34 திருப் பாடல்களும், **கருவூர்த்தேவர்** பாடிய 10 திருப் பதிகங்களில் 103 திருப் பாடல்களும், **பூந்துருத்திநம்பி காடநம்பி** பாடிய 2 திருப்பதிகங்களில் 12 திருப்பாடல்களும், **கண்டராதித்தர், வேணாட்டடிகள், சேதிராயர்** ஆகியோரின் ஒவ்வொரு திருப் பதிகத்திலும் 10 திருப்பாடல்களும், **திருவாலியமுதனாரின்** 4 திருப்பதிகங்களில் 42 திருப் பாடல்களும், **புருடோத்தம நம்பியின்** 2 திருப்பதிகங்களில் 42 திருப்பாடல்களும் காணப்படுகின்றன.

சோழப்பெருமன்னர் காலத்தில் பாடப்பட்ட தெய்வீகத் தீந்தமிழ் இசைப் பாடல்களே இவை.

## திருப்பல்லாண்டு

ஒன்பதாந் திருமுறையில் இடம்பெற்ற திருப்பல்லாண்டைப் பாடியவர் **சேந்தனார்** ஆவார். ஒரே ஒரு திருப்பதிகமே திருப்பல்லாண்டில் காணப்படுகின்றது. திருப்பல்லாண்டுத் திருப்பாடல்களின் எண்ணிக்கை 13 ஆகும். சேந்தனார் பாடிய 3 திருப் பதிகங்கள் திருவிசைப்பாவில் இடம்பெற்றுள்ளன.

சிதம்பரத்திலே ஓடாது நின்ற தேரை ஓடச் செய்யவே சேந்தனார் திருப்பல்லாண்டு பாடினார் என்பர். பஞ்சபுராணம் பாடும்போது ஒன்பதாந் திருமுறையிலிருந்து திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என, இரு திருப்பாடல்கள் பாடுவது ஒன்பதாந் திருமுறையின் பெருமைக்குச் சான்றாகும்.

தாய்லாந்து, இந்தோனேசியா போன்ற நாடுகளில் முடி சூட்டுவிழா முதலிய மங்களகரமான வைபவங்களில் மகிழ்ச்சியோடு திருப்பல்லாண்டு ஓதப்பெற்று வந்துள்ளது. இதனை **"லாண்டு"** பாடுதல் என அழைத்தனர்.

இறைவனைப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துவது, இறையருள் பல்லாண்டு இப்பாரில் நிலைத்து ஆன்மாக்கள் பயன்பெற வாழ்த்துவதற்குச் சமனாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பத்தாந் திருமுறை

பத்தாந் திருமுறையில் **திருமூலர்** பாடியருளிய **திருமந்திரம்** என்ற தனிநூல் காணப்படுகின்றது. இங்கே 3000 திருப்பாடல்கள் காணப்படுகின்றன. இதைத் **தமிழ் மூவாயிரம்** என்றும் அழைப்பர்.

இலங்கையைச் **"சிவபூமி"** என்று முதன்முதலில் பாடியவர் இவரே. வடநாட்டுச் **சுந்தரநாத முனிவர்** தமிழ்நாட்டுத் திருமூலராகி,

**"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்**
**தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே"**

எனத் தமிழில் ஒப்பற்ற சாத்திர நூலாகிய திருமந்திரத்தைப் பாடியருளினார். இந்நூல் சாத்திரநூல் மட்டுமன்றி, சிறந்த இலக்கியமாகவும், முத்திக்கும் வழிகாட்டும் ஞானக் களஞ்சியமாகவும் விளங்குகின்றது.

**திருமந்திர மாலை, சுந்தரனாகமம்** முதலிய பெயர்களும் இதற்குண்டு, திருமந்திரம் 9 தந்திரங்களாக (ஆகமமுறைப்படி) பிரிக்கப்பட்டுள்ளது. சிவாகமங்கள் 28 ல் "காரண" ஆகமம் முதல் "மகுட" ஆகமம் வரையுள்ள 9 ஆகமங்களின் சாரத்தைத் திருமந்திரத்தில் காணலாம்.

ஒரு ஞானவான் **"நான்பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்"** என்ற எண்ணத்தோடு, தொண்டு புரிதல் வேண்டும் என்பார் திருமூலர். ஆகமங்களின் உட்பொருளையும் சிவ சக்தி வழிபாட்டின் தத்துவத்தையும், யோகத்தின் உண்மைத் தன்மையையும் விரிவாகக் கூறும் இந்நூல் **"தனித் தமிழ் ஆகமம்"** என்று பெயர் பெறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதினோராந் திருமுறை

இத்திருமுறையில் மொத்தம் 40 பிரபந்தங்கள் இடம்பெற்றுள்ளன. இவற்றைப் பாடியவர்கள் தொகை 12. பதினோராந் திருமுறையை, **அற்புதமான ஞானக் களஞ்சியம்** என்று அறிஞர்கள் பாராட்டுகிறார்கள்.

சிவபெருமான் பாடியருளிய ஒரு திருப்பாடலும் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளமை இதன் சிறப்புக்கு ஒரு காரணமாகும். மதுரைத் திருவாலவாய் என்னும் திருக்கோவிலில் எழுந்தருளியுள்ள சிவபெருமானின் திருப்பெயர் திருவாலவாயுடையார் என்பதாகும்.

மதுரைத் திருவாலவாய் என்னும் தனது ஆலயத்தில் இசைப்பணி புரிந்த பாணபத்திரர் என்னும் அடியாருக்குப் பொன்னளிக்குமாறு, சேரநாட்டையாண்ட சேரமான் பெருமாள் நாயனாருக்குச் சிவபெருமான் எழுதிக் கொடுத்த சீட்டுக் கவியாகிய திருப்பாடல் **திருமுகப் பாசுரம்** என வழங்கி; இத்திருமுறையில் முதற்பாடலாக வந்துள்ளது.

## திருமுகப் பாசுரம்

திருச்சிற்றம்பலம்

மதிமலி புரிசை மாடக் கூடல்
பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிற (கு)
அன்னம் பயில்பொழில் ஆல வாயின்
மன்னிய **"சிவன் யான்"** மொழிதரு மாற்றம்
பருவக் கொண்மூப் படியெனப் பாவலர்க்
கொருமையின் உரிமையின் உதவி ஒளிதிகழ்
குருமா மதிபுரை குலவிய குடைக்கீழ்ச்
செருமா உகைக்கும் சேரலன் காண்க!
பண்பா லியாழ்பயில் பாண பத்திரன்
தன்போ லென்பால் அன்பன் தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்.
மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பதினோராந் திருமுறையில் சிவபெருமானோடு விநாயகர், முருகன் முதலான தெய்வங்களையும், சமயாச்சாரியார்களையும், தொண்டர்களையும், நாயன்மார்களையும் புகழ்ந்து பாடிய பாடல்கள் காணப்படுகின்றன.

அந்தாதி, இரட்டை மணிமாலை, மும்மணிக் கோவை, உலா, ஆற்றுப்படை, நான்மணிமாலை, கலம்பகம் போன்ற பிரபந்த வகைகளில் இயற்றப்பட்ட பாடல்களைக் கொண்ட தொகுப்பாகவும் இத்திருமுறை அமைத்துள்ளது. பலவாய பிரபந்தங்களைக் கொண்டு அமைந்ததால் இத் திருமுறையைப் **"பிரபந்த மாலை"** என்றும் வழங்குவர்.

## பதினோராந் திருமுறை பற்றிய விபரம் வருமாறு

| | ஆசிரியர் | பிரபந்தம் | பாடல்தொகை |
|---|---|---|---|
| 1. | திருவாலவாயுடையார் | திருமுகப் பாசுரம் | 1 |
| 2. | காரைக்கால் அம்மையார் | மூத்த திருப்பதிகம் -1 | 11 |
| | | மூத்த திருப்பதிகம் -2 | 11 |
| | | திரு இரட்டை மணிமாலை | 20 |
| | | அற்புதத் திருவந்தாதி | 101 |
| 3. | ஐயடிகள் காடவர்கோன் | சேத்திரத் திருவெண்பா | 24 |
| 4. | சேரமான்பெருமாள் நாயனார் | பொன்வண்ணத்தந்தாதி | 100 |
| | | திருவாரூர் மும்மணிக்கோவை | 30 |
| | | திருக்கயிலாய ஞான உலா | 199 அடிகள் |
| 5. | நக்கீரதேவர் | கயிலைபாதி காளத்திபாதி | 100 |
| | | திருஈங்கோய்மலை எழுபது | 70 |
| | | திருவலஞ்சுழி மும்மணிக்கோவை | 10 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| | | திருஎழு கூற்றிருக்கை | 59 அடிகள் |
| | | பெருந்தேவ பாணி | 71 அடிகள் |
| | | கோபப் பிரசாதம் | 100 அடிகள் |
| | | கார் எட்டு | 8 |
| | | போற்றித் திருக்கலி வெண்பா | 90 அடிகள் |
| | | திருமுருகாற்றுப்படை | 317 அடிகள் |
| | | திருக்கண்ணப்பதேவர் திருமறம் | 158 அடிகள் |
| 6. | கல்லாடதேவர் | திருக்கண்ணப்பதேவர் திருமறம் | 38 அடிகள் |
| 7. | கபிலதேவர் | மூத்த நாயனார் திருவிரட்டைமணிமாலை | 20 |
| | | சிவபெருமான் திருவிரட்டைமணிமாலை | 87 |
| | | சிவபெருமான் திருவந்தாதி | 100 |
| 8. | பரணதேவர் | சிவபெருமான் திருவந்தாதி | 101 |
| 9. | இளம்பெருமானடிகள் | சிவபெருமான் திருமும்மணிக்கோவை | 30 |
| 10. | அதிராவடிகள் | மூத்த பிள்ளையார் திருமும்மணிக்கோவை | 23 |
| 11. | பட்டினத்துப் பிள்ளையார் (பட்டினத்தார்) | கோயில் நான்மணிமாலை | 40 |
| | | திருக்கழுமல மும்மணிக் கோவை | 12 |
| | | திருவிடைமருதூர் மும்மணிக்கோவை | 80 |
| | | திருவேகம்பமுடையார் திருவந்தாதி | 100 |
| | | திருவொற்றியூர் ஒருபா ஒருப∴து | 10 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 12. | நம்பியாண்டார் நம்பி | திருநாரையூர் விநாயகர் திருவிரட்டை மணிமாலை | 15 |
| | | கோயிற்றிருப்பண்ணியர் விருத்தம் | 20 |
| | | திருத்தொண்டர் திருவந்தாதி | 70 |
| | | ஆளுடையபிள்ளையார் திருவந்தாதி | 101 |
| | | ஆளுடையபிள்ளையார் திருச்சண்பை விருத்தம் | 11 |
| | | ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக்கோவை | 30 |
| | | ஆளுடையபிள்ளையார் திருவுலாமாலை | 147 அடிகள் |
| | | ஆளுடையபிள்ளையார் திருக்கலம்பகம் | 49 |
| | | ஆளுடையபிள்ளையார் திருத்தொகை | 36 |
| | | திருநாவுக்கரசு தேவர் திருஏகாதசமாலை | 11 |

திருமுருகாற்றுப்படை பாடிய நக்கீரர் வேறு, நக்கீரதேவர் வேறென்பர் அறிஞர். இருப்பினும் நக்கீரதேவர் பாடியதாகவே 10 பிரபந்தங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

இத்திருமுறையில் காரைக்காலம்மையார் என்னும் பெண் அடியாரின் பாடல்கள் அமைந்திருப்பதும் சிறப்பாகப் போற்றப்படக் கூடியது. காரைக்காலம்மையார் வகுத்து வைத்த **பதிகம்** பாடும் மரபும் மற்றும் புதுமைகளும் பிற்கால அடியார்களின் பக்திப் பாடல்களுக்கு அத்திவாரமிட்டன என்று பெருமையோடு குறிப்பிடலாம்.

சங்ககாலத்து நக்கீரரின் திருமுருகாற்றுப்படை முதல், பதினொரு திருமுறைகளையும் தொகுத்த நம்பியாண்டார் நம்பியின் பாடல்கள் வரை சுமார் ஆயிரம் ஆண்டுகால அடியார்களின் பக்தி வெளிப்பாடுகளை இத்தொகுப்பிலே தரிசிக்கலாம்.

பதினோராந் திருமுறை இயற்றமிழ் நூல் என்று போற்றப் பட்டாலும், காரைக்காலம்மையாரின் இரண்டு பிரபந்தங்கள் **நட்டபாடை** என்னும் பண்ணிலும், **இந்தளம்** என்னும் பண்ணிலும் அமைந்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பன்னிரண்டாந் திருமுறை

பன்னிரண்டாந்திருமுறையில் இடம்பெற்ற ஒரே நூல் **பெரியபுராணம்** ஆகும். இதனைப் பாடியவர் **சேக்கிழார் சுவாமிகள்** ஆவார். இவர் **அநபாய சோழனின்** முதலமைச்சராக **உத்தம சோழ பல்லவன்** என்ற பட்டப் பெயரோடு கடமை புரிந்தவர். **அருண்மொழித் தேவர்** என்ற இயற் பெயரைவிட **சேக்கிழார்** என்ற இவரது வேளாளர் குடிப்பெயரே இவருக்கு நிலைத்துவிட்டது.

சுந்தரர் பாடிய **திருத்தொண்டத்தொகையையும்,** அதன் விரிவாக நம்பியாண்டார் நம்பி பாடிய **திருத்தொண்டர் திருவந்தாதியையும்** ஆதாரங்களாகக் கொண்டு, தனது ஆராய்ச்சி அறிவின் மூலமும், கர்ண பரம்பரைக் கதைகள் (செவிவழிச் செய்திகள்) மூலமும் தகவல்களைப் பெற்று, ஆழ்ந்த தியானத்தின் மூலம் சிலவற்றைக் கண்டு தெளிவடைந்து தனது அற்புதமான கற்பனை ஆற்றல் புலப்பட கவித்துவத்தின் மகத்துவம் விளங்க அடியார் வரலாற்றைத் **திருத்தொண்டர் புராணம்** என்ற பெயரில் அற்புதமாகப் பக்திச்சுவை நனிசொட்டச் சொட்டப் பாடினார்.

**"தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதே"** என்ற ஔவையார் கூற்றுப்படி, தொண்டர் பெருமை கூறும் இந்நூல் **"பெரிய புராணம்"** என்னும் பெயரிலேயே அழைக்கப்படுகின்றது. சிவபெருமான் **"உலகெலாம்"** என்று அடியெடுத்துக் கொடுக்க, சேக்கிழார் சுவாமிகள் இந்நூலைப் பாடினார் என்பது வரலாறு. இது ஒரு வரலாற்றுக் காப்பியமாகவும், சைவசித்தாந்த சாகரமாகவும் தமிழில் பாடப்பட்ட முதற் புராண நூலாகவும் பெருமை பெற்றது.

சாதி, குலம், பொருள், அறிவு, பதவி, வயது, இடம், பால் முதலிய ஏற்றத் தாழ்வுகள் எதுவுமின்றி, ஆண்டவன்மேல் வைத்த அன்பொன்றையே அளவுகோலாகக் கொண்டு அடியார்களைப் போற்றுகின்றது இந்நூல். சைவசமயத்தின் **ஒரு கண்ணாகப்** போற்றப்படுகின்ற இந்நூலை **"அன்பு நூல்"** என்பர் அறிஞர்.

63 தனியடியார்களையும், 9 தொகையடியார்களையும் பற்றிய 4253 செய்யுட்களைக் கொண்டமைந்த இந்நூலில் சில இடைச் செருகற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்களும் இனங் காணப்பட்டுள்ளதால் இத்தொகை சற்றே மாறுபடலாம். தமிழ்ப் புராணங்களுக்கு காலத்தால் மட்டுமன்றிக் கருத்தாலும் முன்னோடியாக விளங்குவது பெரியபுராணமாகும்.

இரு காண்டங்களாக அமைந்த இப்புராணம் திருமலைச் சருக்கம் முதல் வெள்ளானைச் சருக்கம் ஈறாக 13 சருக்கங்களைக் கொண்டது.

நம்பியாண்டார்நம்பிகளின் பின் இப்புராணம் பாடப்பட்டதால் இப்புராணத்தைத் தில்லைவாழ் அந்தணர்களின் விருப்பத்தோடு **அநபாயசோழனும்** அவனது மந்திரி பிரதானிகளும், அறிஞர்களும், புலவர்களும், பன்னிரண்டாந் திருமுறையாகச் சேர்த்துப் பெருமைப்படுத்தினர்.

இப்பெரியபுராணம் சிறந்த இலக்கியக் காப்பியமாகவும், வரலாற்றுச் சான்றுகளைத் தரும் நூலாகவும், பக்திச்சுவை பயக்கும் நூலாகவும், தமிழ்க்கலைகளின் சிறப்பைக் கூறும் நூலாகவும், சைவசமயக் கருத்துக்களைத் தத்துவங்களாகவும், கதைகளாகவும் கூறும் சிறந்த நூலாகவும் திகழ்கின்றது.

பெரியபுராணத்தை வரலாற்றுப் புராணம் என்பார் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன். பெரிய புராணத்தின் பெருமையும் பெரிது. இதன் பெருமையை விரித்துரைத்தல் அரும்பெரும் காரியமாகும்.

**முன்னிரு முதல்வோராலும் அறியொணா வடிவாய்த் தோன்றிப்**
**பின்னிரு முதல்வோர்தங்கள் பெரும்பதம் அளித்தோன் மேன்மைப்**
**பன்னிரு திருமுறைப்பாப் படித்திடும் அடியார் தம்மைத்**
**தன்னிரு திருத்தாள்காட்டித் தன்னுடன் இணைப்பான் கண்டீர்.**

**எடுத்தாண்ட நூல்கள்;**

1. பன்னிரு திருமுறைப் பெருந்திரட்டு, திரு.வ.இராமநாதப்பிள்ளை
2. இந்துநாகரிகம் திரு.க.சி.குலரத்தினம்
3. திருவாதவூரடிகள் புராணம், கடவுள் மாமுனிவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்சபுராணப் பாடல்கள்

திருச்சிற்றம்பலம்

## தேவாரம்

தேவார்ந்த தேவனைத் தேவ ரெல்லாந்
திருவடிமே லலரிட்டுத் தேடி நின்று
நாவார்ந்த மறைபாடி நட்ட மாடி
நான்முகனு மிந்திரனு மாலும் போற்றக்
காவார்ந்த பொழிற்சோலைக் கானப் பேராய்
கழுக்குன்றத் துச்சியாய் கடவு ளேநின்
பூவார்ந்த பொன்னடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணி யனே.

(சுந்தரர்)

## திருவாசகம்

பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு
நெஞ்சாய துயர்கூர நிற்பேன்உன் அருள்பெற்றேன்
உய்ஞ்சேனான் உடையானே அடியேனை வருகவென்
றஞ்சேலென் றருளியவா றார்பெறுவார் அச்சோவே.

(மணிவாசகர்)

## திருவிசைப்பா

அற்புதத் தெய்வம் இதனின்மற் றுண்டே?
அன்பொடு தன்னையஞ் செழுத்தின்
சொற்பதத் துள்வைத் துள்ளம்அள் ளூறும்
தொண்டருக் கெண்டிசைக் கனகம்
பற்பதக் குவையும் பைம்பொன்மா ளிகையும்
பவளவா யவர்பணை முலையும்
கற்பகப் பொழிலும் முழுதுமாங் கங்கை
கொண்டசோ ழேச்சரத் தானே.

(கருவூர்த்தேவர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

குழலொலி யாழொலி கூத்தொலி ஏத்தொலி
எங்குங் குழாம்பெருகி
விழவொலி விண்ணளவுஞ் சென்று விம்மி
மிகுதிரு வாரூரின்
மழவிடை யாற்கு வழிவழி யாளாய்
மணஞ்செய் குடிப்பிறந்த
பழவடி யாரொடுங் கூடியெம் மானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

(சேந்தனார்)

## திருப்புராணம்

ஆதியாய் நடுவுமாகி அளவிலா அளவுமாகிச்
சோதியாய் உணர்வுமாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா ஏகமாகிப் பெண்ணுமாய் ஆணுமாகிப்
போதியா நிற்கும்தில்லைப் பொதுநடம் போற்றிபோற்றி!

(சேக்கிழார்)

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பன்னிரு திருமுறைப் பாடல்கள்

திருச்சிற்றம்பலம்

## முதலாந் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : நட்டராகம்** **தலம் : திருப்பிரமாபுரம்**

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதி சூடி
காடுடைய சுடலைப் பொடிபூசியென் உள்ளங்கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட்பணிந் தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய பெம்மானிவ னன்றே.

## இரண்டாந் திருமுறை

### திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

**பண் : பியந்தைக் காந்தாரம்** **தலம் : பொது**

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி
சனிபாம் பிரண்டும் உடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாந் திருமுறை

**திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்**

**பண் : புறநீர்மை** **தலம் : கோணமாமலை**

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றிசைப் பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியுந் தொழிலர்பால் நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலங்
கோயிலுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.

## நான்காந் திருமுறை

**திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரம்**

**பண் : திருநேரிசை** **தலம் : திருப்பாதிரிப்புலியூர்**

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி என்மனத்தே
வழுவா திருக்க வரம்தர வேண்டுமில் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி யிருந்தருள் செய்பா திரிப்புலியூர்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை மேல்வைத்த தீவண்ணனே.

## ஐந்தாந் திருமுறை

**திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரம்**

**தலம் : திருமறைக்காடு**

பண்ணின் நேர்மொழி யாளுமை பங்கரோ
மண்ணி னார்வலஞ் செய்ம்மறைக் காடரோ
கண்ணி னாலுமைக் காணக் கதவினைத்
திண்ண மாகத் திறந்தருள் செய்மினே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆறாந் திருமுறை

**திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த திருத்தாண்டகம்**

**தலம் : திருப்புக்கொளியூர்**

பேரா யிரம்பரவி வானோரேத்தும் பெம்மானைப்
பிரிவிலா அடியார்க் கென்றும்
வாராத செல்வம் வருவிப்பானை, மந்திரமும்
தந்திரமும் மருந்தும் ஆகித்
தீராநோய் தீரத்தருள வல்லான் தன்னைத்
திரிபுரங்கள் தீயெழத்திண் சிலைகைக்கொண்ட
போரானைப் புள்ளிருக்கு வேளூரானைப் போற்றாதே
ஆற்ற நாள் போக்கினேனே.

## ஏழாந் திருமுறை

**சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்**

**பண் : இந்தளம்** **தலம் : திருவெண்ணெய் நல்லூர்**

பித்தாபிறை சூடிபெரு மானேயரு ளாளா
எத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய் பெண்ணை தென்பால்வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
அத்தாவுனக் காளாயினி அல்லேனென லாமே.

## எட்டாந் திருமுறை

**மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம்**

**தலம் : திருப்பெருந்துறை**

மெய்தான் அரும்பி விதிர்விதிர்த் துன்விரை
யார்கழற் கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி
வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்துன்னைப் போற்றி சயசய
போற்றி என்னும்
கைதான் நெகிழவிடேன் உடையாய் என்னைக்
கண்டு கொள்ளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்பதாந் திருமுறை

### சேந்தனார் அருளிச் செய்த திருப்பல்லாண்டு

**பண் : பஞ்சமம்** **தலம் : கோயில்**

மன்னுக தில்லை வளர்கநம்
பக்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனியெல் லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

## பத்தாந் திருமுறை

### திருமூலர் அருளிச் செய்த திருமந்திரம்

சிவ சிவ என்கிலர் தீவினை யாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவார்
சிவ சிவ என்றிடச் சிவகதி தானே.

## பதினோராந் திருமுறை

### கபில தேவ நாயனார் அருளிச் செய்தது

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கைத்தணி விப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினாற்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## பன்னிரண்டாந் திருமுறை

### சேக்கிழார் அருளிச் செய்த பெரியபுராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவா நீ ஆடும்போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகளங்கன் அவர்கள் எழுதிய நூல்கள்

1) "செல்" "வா" என்று ஆணையிடாய் (அஞ்சலிக் கவிதை-1977)
2) சேரர் வழியில் வீரர் காவியம் (குறுங்காவியம்,-1982)
3) சமவெளி மலைகள் (அகளங்கன்.சு.முரளிதரன் கவிதைகள்-1985)
4) வாலி (ஆய்வு நூல்.மூன்று பதிப்புகள்.1987, 1989, 2006- இலங்கை இலக்கியப் பேரவையின் சிறந்த இலக்கிய நூலுக்கான சான்றிதழ்- 1987)
5) இலக்கியத் தேறல் (கட்டுரைகள்-1988)
6) நளவெண்பா (கதை-1989)
7) அன்றில் பறவைகள் (நாடகங்கள், 1992-தேசிய சாகித்திய மண்டலப் பரிசு- 1992)
8) முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்தர் (வரலாறு-1992)
9) இலக்கியச் சிமிழ் (கட்டுரைகள் - இருபதிப்புக்கள் - 1992, 1993)
10) தென்றலும் தெம்மாங்கும் (கவிதைகள்-1993)
11) பன்னிரு திருமுறை அறிமுகம் (சமயம்-1994)
12) மகாகவி பாரதியாரின் சுதந்திரக் கவிதைகள் (ஆய்வு-1994)
13) இலக்கிய நாடகங்கள். (நாடகங்கள்,-1994, வடக்கு கிழக்கு மாகாண சிறந்த நூற் பரிசு, கொழும்புத் தமிழ்ச் சங்கப் பரிசு-1994)
14) ஆத்தி சூடி (விளக்கவுரை-1995)
15) கொன்றை வேந்தன் (விளக்கவுரை-1996)
16) அகளங்கன் கவிதைகள் (கவிதைகள்-1996, வடக்கு கிழக்கு மாகாண சிறந்த நூற் பரிசு - 1996)
17) வாக்குண்டாம் (மூதுரை - விளக்கவுரை-1997)
18) சிவபுராணம் (பொருளுரை-1997)
19) செந்தமிழும் நாப்பழக்கம் (பேச்சுக்கள்- மூன்று பதிப்புக்கள் 1997, 2015, 2017)
20) நாமறிந்த நாவலர் (சிறு குறிப்புக்கள்- இரு பதிப்புக்கள், 1997, 2008.)
21) நல்வழி (பொழிப்புரை -விளக்கவுரை-1998)
22) இசைப்பாமாலை (இசைப் பாடல்கள்-1998)
23) கவிஞர் ஜின்னாஹ்வின் இரட்டைக் காப்பியங்கள் ஓர் ஆய்வு (ஆய்வு-1999)
24) இலக்கியச் சரம் (கட்டுரைகள்- 2000)
25) வெற்றி வேற்கை (நறுந்தொகை - உரை இரு பதிப்புக்கள் 2000, 2015)
26) கூவாத குயில்கள் (நாடகங்கள்-2001)
27) திருவெம்பாவை உரை (சமயம் இரு பதிப்புக்கள் - 2002, 2018)
28) பாரதப் போரில் மீறல்கள் (கட்டுரை-2003)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29) சுட்டிக் குருவிகள் (மழலைப் பாடல்கள்-2003)
30) சின்னச் சிட்டுக்கள் (சிறுவர் பாடல்கள்-2005)
31) நறுந் தமிழ் (கட்டுரைகள்-2006)
32) பாரதியாரும் பாஞ்சாலி சபதமும் (ஆய்வு-2007)
33) பத்தினித் தெய்வம்(நாட்டிய நாடகங்கள்-2008-வடக்கு மாகாண சிறந்த நூற் பரிசு 2008)
34) வேரும் விழுதும் (கட்டுரைகள்-2008, வடக்கு மாகாண சிறந்த நூற் பரிசு 2008)
35) கங்கையின் மைந்தன் (நாடகங்கள் - 2009, வடக்கு மாகாண சிறந்த நூற் பரிசு, தமிழ் நாடு கலை இலக்கியப் பெருமன்றப் பரிசு, தமிழியல் விருது, தேசிய சாகித்திய மண்டல சிறப்புச் சான்றிதழ், இலங்கை இலக்கியப்பேரவை விருது-.2009)
36) பந்து அடிப்போம் (சிறுவர் பாடல்கள்-2010)
37) சிரிக்க விடுங்கள் (சிறுவர் பாடல்கள்-2010)
38) சகல கலா வல்லிமாலை-(உரையுடன்-2011)
39) அலைக்குமிழ் (நாவல்-2011, தேசிய சாகித்திய மண்டல சிறப்புச் சான்றிதழ். கொடகே தேசிய சாகித்திய சிறப்புச் சான்றிதழ். இலங்கை இலக்கியப் பேரவையின் சிறப்புச் சான்றிதழ். தமிழியல் விருது-2011)
40) சின்னஞ் சிறிய சிறகுகள். (குழந்தைப் பாடல்-2012, தேசிய சாகித்திய மண்டலப் பரிசு, வடக்கு மாகாண சிறந்த நூற் பரிசு, தமிழியல் விருது.-2012)
41) கம்பனில் நான். (கட்டுரைகள். 2013.)
42) முற்றத்துக் கரடி (சிறுகதைகள் - 2014 - தமிழ்நாடு **S.R.M.** பல்கலைக்கழக தமிழ்ப் பேராய சர்வதேச விருது, தமிழ்நாடு, திருப்பூர், கவிஞர் சுகந்தி சுப்பிரமணியம் நினைவுப் பரிசு - 2014)
43) தமிழ்த் தூது. வண. பிதா. தனிநாயகம் அடிகளார். (சிறு குறிப்புக்கள் -2014)
44) வன்னிப் பிரதேச வயற் பண்பாடு.( ஆய்வு- 2014, வடக்கு மாகாண சிறந்த நூற்பரிசு, தமிழியல் விருது-2014, கொழும்புக் கம்பன் கழக நுழைபுலம் ஆய்வுவிருது - 2017)
45) ஞானப்பழம் (பாநாடகம் - 2017, வடக்கு மாகாண சிறந்த நூற் பரிசு)
46) ஆனைகட்டிய அரியாத்தை (நாடகம் -2017)
47) சிறுவர் சிந்தனைக் கதைகள் - 2017
48) சங்கமும் தமிழரும் (ஆய்வு - 2018, வவுனியூர் இரா உதயணன் இலங்கை இலண்டன் இலக்கிய நிறுவகப் பரிசு)
49) எங்கள் காடு (சிறுவர் நாடகம் - 2019, தேசிய சாகித்திய மண்டல சிறப்புச் சான்றிதழ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாணி கணனிப் பதிப்பகம். தொ.பே: 024 2223658

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org